<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 19.10.2023**

| | |
|---|---|
| **Name : தினேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1– 3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் குக்கல்பட்டியில் குடியிருந்து பெங்களூரில் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டை சார்ந்தவர். 1–ம் எதிரி கோவிந்தன் எனக்கு தெரியும். அவர்களுக்கு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக காதல் திருமணம் நடந்தது. அவர்கள் இருவருக்கும் இரண்டு குழந்தைகள் உள்ளனர். எதிரி கோவிந்தன் ஆயுத பிரிவில்போலிசாக வேலை செய்து வந்தார்.

2) கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக 1–ம் எதிரி கோயம்பத்தூரில் காவல் துறையில் வேலை செய்துவந்தார். பிறகு சேலம் மாறுதல் ஆகி இங்கே பணிபுரிந்தார். 1–ம் எதிரி வினுப்பிரியா இருக்கும்போதே இரண்டாவதாக கோயம்புத்தூரில் திருமணம் செய்துகொண்டதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். 2ம் மற்றும் 3ம் எதிரிகள் இருவரும் 1ம் எதிரியின் பெற்றோர்கள் ஆவார்கள்.

3) அ.சா.1 இது சம்மந்தமா மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்மந்தமாக போலிசார் விசாரித்தனர். நான் எனது வீட்டில் இருந்தபோது, கடந்த 19.10.2022–ம் தேதி மதியநேரத்தில் மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலிசார் குக்கல்பட்டி எதிரியின் வீட்டின் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், எனது தகப்பனார் ஜெயக்குமார் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம்.

மகசரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) நான் எங்கே வேலை செய்கிறேன் என்றால் கர்நாடகா பெல்லாரியில் வேலை செய்கிறேன். சம்பவம் நடந்தபோது மேற்சொன்ன இடத்தில் வேலை செய்தேனா என்றால் வீட்டில் தான் இருந்தேன். அ.சா.1 எனது நெருங்கிய சொந்தம் என்றால் சரிதான். 2 வது திருமணம் செய்த தேதி தெரியாது என்றால் சரிதான். 2 வது திருமணம் குறித்து அ.சா.1 சொல்லிதான் தெரியும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

5) சம்பவம் நடந்த போது நான் அங்கே இல்லை என்றும், நான் வேலைக்காக கர்நாடகாவில் இருந்தேன் என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் நான் அவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வரைபடத்தை யார் வரைந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் மேடம் வரைந்தார்கள்.

6) வரைபடத்தில் உள்ள திசையில் காட்டப்பட்டுள்ள வீடுகள் தற்போது சொல்லமுடியுமா என்றால் துள்ளியமாக சொல்லமுடியாது. மகசரில் உள்ள விவரம் என்னால் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். வரைபடத்தில் கையொப்பம் எங்கே வைத்து வாங்கினார்கள் என்றால் கோவிந்தன் வீட்டில் வைத்து வாங்கினார்கள். போலிசார் என்னை எங்தேக விசாரித்தனர் என்றால் வீட்டின் அருகில் வைத்து விசாரித்தார்கள்.

**7)** காவல் நிலையத்தில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை சம்பவயிடத்தில் வைத்து வாங்கினார்கள். எந்த தேதியில் வாங்கினார்கள் என்றால் தெரியாது. யார் என்னை விசாரித்தார்கள் என்றால் நினைவில்லை. மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**